IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 65 /2020

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.06.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | பக்தவத்சலன் | **Caste** | : | |
| **S/o.** | **:** | ராமகிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 3 ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் தற்போது ஈரோடு மாவட்டத்தில் இருக்கும் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் TP–HUB–ல் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | TN 30 AT 1014 (MAHINDRA PICKUP VAN) பாலிசி | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | SALEM DJJ COURT–ல் MCOP 510/2018 Award | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.3 | – | CMA 959/2020 & CMP 6057/2020 HIGH COURT AWARD | சான்றிட்டநகல் |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு இருந்தது என்றால் சரிதான். 30 நபர்கள் பயணம் செய்திருநதாலும் ஒரு நபர் தான் இழப்பீடு கோரியிருந்தார் என்றாலும் 2 வதாக தற்போது இந்த மனுதாரர் இழப்பீடு கோரியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவருக்காக சேலத்தில் ஒரு மனுவும் காயம்பட்ட 3 நபர்கள் இந்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்துள்ளார்கள். அதில் இரண்டு மனுக்கள் மனுதாரர் ஆஜரின்மையால்

தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் சரியான தீர்ப்பைதான் வழங்கியுள்ளது என்றாலும் இழப்பீடு சரியாக வழங்க கூடாது என்பதற்காக நான் சாட்சயிமளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. 3ம் எதிர்மனுதாரராகிய எங்கள் நிறுவனம் தான் பகரப்பொறுப்பாளி என்பதால் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—பக்தவத்சலன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.